Registered as a Newspaper

பக்கங்கள்: ஆறு

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்.

# உதயன்

விலை
ரூ2/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T' Phone: 23794

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆனி மீ 25 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 05 (09 : 07 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL AILY கதிர்:- 182

# **** ஈரோஸ் எம். பிக்கள் ****

# 20-ம் திகதி பதவியேற்பு!

## கொழும்பில் வெளியான தகவல்

கொழும்பு, ஜூலை 9

ஈரோஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட 13 எம். பிக்களும் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளு மன்றம் கூடும்போது பதவிப் பிரமாணம் செய்து கொள்வர்.

ஈரோஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பில் இச் செய்தி வெளியிடப்பட்டது,

ஈழவர் ஜனநாயக முன்னணி எடுக்கவிருக்கும் முக்கிய முடிவு ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக செய்தி ஒன்று வெளியானது தெரிந்ததே.

இந்த விடயம் குறித்து ஈழவர் ஜனநாயக முன்னணிப் பிரமுகர்கள் வெள்ளி இரவு ஜனாதிபதியைச் சந்திக்கவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின்னர் நேற்று ஈரோஸ் எம். பிக்கள் பதவிப் பிரமாணம் செய்வது தொடர்பான செய்தி கொழும்பில் வெளியிடப்பட்டது.

கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள் 13 பேரும் இதுவரை கூறும் எம். பி. பதவியை ஏற்காமல் இருந்தனர் என்பது தெரிந்ததே.

பதவியேற்பதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மூன்று மாதக் காலக்கெடு முடிவடைந்ததை அடுத்து தெரிவான 13 பேரும் பதவியிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

அவர்களின் இடத்துக்குப் புதியவர்களை ஈழவர் ஜனநாயக முன்னணி நியமிக்கவேண்டியிருந்தது. (உ-ஒ)



முச்சந்தி முரளி

எங்களின்ரை கலைஞர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் நல்ல வாய்ப்பாய் போயிட்டுது எண்டு சொல்லுங்கோ......!

## கப்பல் மூலம் மா வரும்?

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடபகுதிக்குத் தேவையான மாவை திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம்கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு செயலக அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது. (ஒ-10)

## நல்லூரில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

நல்லூர் பகுதியில் நேற்றுக் காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ரோந்து சென்ற படையினர் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததாகவும் தெரியவந்தது.

உயிரிழந்தவர்கள் நிக்சன் (நிசந்தன்), அன்பழகன் எனத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து ஊர்ஜிதமான தகவல் ஏதும் கிடைக்கவில்லை, (உ-10-13

## சிறுவர்கள் காயம்!

கரவெட்டி, ஜூலை 9

கரவெட்டி மேற்கு பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற மோதல் ஒன்றின்போது இரு சிறுவர்கள் காயமுற்றனர்.

பொன்னையா பாஸ்கரன் (வயது 14), பொன்னையா கிருஷ்ணகுமார் (வயது 11) ஆகியோரே காயமடைந்தவர்கள் என்றும் இருவரும் சகோதரர்கள் என்றும் தெரியவந்தது. (ஒ-70)

## நேற்று மாலை நடந்த சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று மாலை 5.45 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

வானில் வந்தவர்கள் மீது பதுங்கி இருந்த சிலர் தாக்குதல் நடத்தினர் என்றும் அப்போது ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் கூறப்பட்டது.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

## கங்கைக்கு 45 பேர் பலி!

லக்னோ, ஜூலை 9

உத்தர பிரதேசத்தில் கங்கையில் நேற்று முன்தினம் படகு ஒன்று கவிழ்ந்ததில் 45 பேர் மூழ்கினர் என்று அறிவிக்கப்பட்டது.

பத்துப் பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டன

உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளும் என்று கூறப்படுகிறது. (உ-எ)

## பழம் வீதியில் சடலம்

யாழ் பழம் வீதிப் பகுதியில் நேற்று மாலை 6-30 மணியளவில் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அப் பகுதியில் தேடுதலும் இடம்பெற்றது. (உ-9)

## கொள்ளை!

தங்காலையில் உள்ள கூட்டுறவுச் சங்கம் ஒன்றினுள் ஆயுதம் தரித்த மூன்று இளைஞர்கள் புகுந்து ஊழியரைப் பயமுறுத்தி 80 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

### திட்டமிட்ட குடியேற்றம்:

## ராஜீவின் குற்றச்சாட்டும் பிரேமாவின் மறுப்பும்!

கொழும்பு, ஜூலை 9

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அரசகுடியேற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசு மீது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகளை இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா மறுத்திருக்கிறார்.

ஜூன் 20 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பிய கடிதத்தில் இது தொடர்பாக இந்தியப் பிரதமர் கூறியிருப்பதாவது:-

மாகாணசபைக்கு அதிகாரப் பரவலாக்கலை உரிய நேரத்தில் வழங்கியும் —

தமிழர் பகுதிகளில் இனவிகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் விதத்தில் இலங்கை அரசு திட்டமிட்டு நடத்தி வரும் அரச குடியேற்றத் திட்டங்கள் நிறுத்தப்பட்டும் இருப்பின் —

தீவிரவாதிகள் தனிமைப் படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டிருப்பர்; வன்செயலும் முடிவுக்கு வந்திருக்கும் — என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு ஜனாதிபதி பிரேமதாஸ ஜூன் 30 ஆம் திகதி அனுப்பிய பதிலில், தெரிவித்திருப்பதாவது:-

தமிழர் பகுதிகளில் தொடர்ந்து அரச உதவியுடன் குடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களுக்கு மவுசு!

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படாததை அடுத்து ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்களுக்கு தெற்கில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து தற்பொழுது பல திரையரங்குகளில் ஈழத்தில் தயாரிக்கப்பட்ட படங்களே காண்பிக்கப் பட்டு வருகின்றன.

முன்னர் திரையிடப்பட்டபோது 10 நாட்கள் கூட ஓடாத பல திரைப்படங்கள் தற்போது 25 நாட்களுக்கு மேலாக நல்ல வசூலுடன் ஓடிக்கொண்டிருக்கின்றனவாம்.

இதேவேளையில் அண்மையில் லட்சக்கணக்கான ரூபா செலவில் திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட ''கொடி பறக்குது'' ''சிவா'' ''என் புருஷன்தான் எனக்கு மட்டும் தான்'' திரைப்படங்கள் திரையிடமுடியாத நிலையில் பெட்டிக்குள் தூங்குகின்றனவாம். (உ-9)

## ராஜீவை தொண்டா சந்தித்தார்

அமைச்சர் தொண்டமான் நேற்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இன்று அவர் இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேச ஏற்பாடகியிருந்தது.

ஜனதாதள் தலைவர் வி. பி. சிங், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் ஆகியோரையும் திரு. தொண்டமான் இன்று சந்திப்பார். (உ-எ)

## இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை!

வியாங்கொடவில் நித்தம்புவ பொலீஸ் பிரதம இன்ஸ்பெக்டர் பிரியாந்தா அபயசிங்க, அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது வாக்கி-டோக்கி சாதனமும் சுட்டவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது. (உ-எ)

# இலங்கையுடன் நட்புறவு ஒப்பந்தம்

# செய்து கொள்ள இந்தியாவும் தயார்!

## ராஜீவ் - பிரேமா கடிதப் பரிமாற்றத்தில் தகவல்

கொழும்பு, ஜூலை 9

இலங்கையுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

ஜூன் 20 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் காந்தி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

''இலங்கை உங்களுடைய விசேட தூதர் பேர்னட் திலகரத்தினவிடம் தெரிவித்து விட்டேன்.

''நட்புறவு உடன்படிக்கையின் வாசகங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தி இறுதியாக்க, திகதிகளை நாம் நிர்ணயிக்க முடியும் என்றும் உங்களுடைய விசேட தூதரிடம் நான் தெரிவித்திருக்கின்றேன்'' -இப்படி பிரதமர் காந்தி தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

ஜூன் 30 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸ பிரதமர் காந்திக்கு அனுப்பிய பதிலில்-

''இந்தியாவுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளலாம் என்ற எனது யோசனைக்கு நீங்கள் சாதகமாக பதிலளித்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

''நகல் உடன்படிக்கையை நாம் ஏற்கனவே புதுடில்லியில் உள்ள வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பிவிட்டோம்.

''இது சம்பந்தமான பேச்சுக்களை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்

இந்த உடன்படிக்கை எமது பாரம்பரிய நட்பு, உறவு உறுதியானதாக அமைய முடியும்'' -என்று கூறியிருக்கிறார். (உ-எ)

### சுபநேரம்

09—07—1989

ஆனி — 25 ஞாயிற்றுக்கிழமை நக்ஷத்திரம்: உத்திரம்

சுபநேரம்:

08.58 முதல் 10.28 வரை

ராகுகாலம்:

04.28 முதல் 05.58 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆனி உத்தர தரிசனம்

## சுற்றிவளைப்பு

பருத்தித்துறை முனைப்பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

## எரிபொருள் ரயில் வந்தது பெற்றோல் விலை இறக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

எரிபொருள் ஏற்றிக்கொண்டு ரயில் நேற்று யாழ் நகர் வந்தது.

நீண்ட நாட்களாக அனுராதபுரத்தில் தங்கி நின்ற இந்த ரயில் விசேட ஏற்பாட்டின்பேரில் இங்கு வரவழைக்கப்பட்டது.

ரயில் இங்கு வந்ததை அடுத்து நேற்று நகரில் கறுப்புச் சந்தையில் பெற்றோல் மற்றும் எரிபொருளின் விலை திடீரென இறங்கியது. உ-9-0

## ஏழாலையில் ஷெல் வீச்சு! மூன்று பேருக்கு காயம்!!

ஏழாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவம் ஒன்றில் மூவர் காயமடைந்தனர்.

ஏழாலைப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக இரவு வேளையில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு தொடர்ச்சியாக 13 ஷெல்கள் இந்தப்பகுதியை நோக்கிஏவப்பட்டனவாம்.

ஷெல் வீச்சில் காயமடைந்தவர்கள் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

முருகேசு பாலசிங்கம் (வயது 49). அவர் மகன் பாலசிங்கம் பாலநேசன் (வயது 10), பொன்னுத்துரை சரோஜா (வயது 28) ஆகியோரே யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப் பட்டிருக்கின்றனர். (உ-9-10)

## சகல தரப்புடனும் பேசியே படையை விலக்க வேண்டும்

### அமிர்தலிங்கம் பேட்டி

சகல தமிழ்க் குழுக்கள் மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுடன் பேச்சுக்கள் நடத்தி இந்திய அமைதிப்படை விலகல் பற்றி முடிவு எடுக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

ஆகாசவாணி செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் திரு: அமிர்தலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

ஒரு குழுவுடன் பேச்சுக்கள் நடத்துவது பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைதிப்படை இப்போது வெளியேறுவது குழப்பத்தையே எற்படுத்தும் என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (உ-எ)

## ஒருநாட்டில் வேறு படையா? பங்களாதேஷ் எதிர்ப்பு!

புதுடில்லி, ஜூலை 9

இந்திய அமைதிப்படை விவகாரத்தில் பங்களாதேஷ் பக்கச் சார்பாக நடக்காது அதே நேரத்தில் ஒரு நாட்டில் இன்னொரு நாட்டின் துருப்புகள் நிலைகொண்டிருப்பதை பங்களாதேஷ் கொள்கை அளவில் எதிர்க்கும்:

—இப்படி பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் அனிசுல் மஹ்மூத் இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவிடம் தெரிவித்தார்:

சார்க் அமைப்புக் கூட்டத்தை இலங்கை பகிஷ்கரிப்பது குறித்து இரு நாடுகளினதும் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) சந்தித்துப் பேசினர். அந்தச் சந்திப்பின்போதே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விடயத்தில் கருணாநிதி இரட்டைவேடம்

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 9

இலங்கை விஷயத்தில் தி. மு. க. தலைவரும் முதலமைச்சருமான கருணாநிதி இரட்டை வேடம் போட்டிருக்கிறார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தனது அறிக்கையில் முன் கண்டவாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இந்திய அமைதிப்படையின் பங்கு குறித்து இந்தியாவில் உள்ள சில அரசியல் கட்சிகள் அரசியல் லாபம் கருதி குற்றஞ்சுமத்துகின்றன.

தமிழர்களின் நலன் கருதாமல் 'தமிழ் ஈழம்' தேவை என்று கருணாநிதி கோரியிருந்தார்.

அமைதிப்படை விலகவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசாவுடன் சேர்ந்து திரு. கருணாநிதி கோரினார்.

இன்று கட்டம் கட்டமாக அமைதிப்படை விலகவேண்டும் என்று திரு: கருணாநிதி கோருகிறார்.

—இப்படி செல்வி ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

## சிங்கப்பூரில் பரிதவித்த பத்து இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 9

தொழில்வாய்ப்புப் பெறச் சென்று சிங்கப்பூரில் நிர்க்கதியான பத்து இலங்கையர் கொழும்புக்குத் திருப்பிக் கொண்டுவரப்பட்டனர்:

எயர்லங்கா விமானம் ஒன்று இவர்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தது;

ரவி என்ற பெயருடைய ஏஜண்ட் ஒருவர் இவர்கள் ஒவ்வொருவரிடமும் 55 ஆயிரம் ரூபா வீதம் பணத்தைப் பெற்றுக்கொண்டு சிங்கப்பூர் அழைத்துச் சென்றார் என்றும்—

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

Chaly C 90, MB - 5, மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு Our Lady Stores, 601 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (1070)

நல்ல நிலையில் உள்ள Vespa Scooter150 + தொடர் இல, 82 Sri 2136 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ துரைசா , சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (11480)

Alsation (அல்சேஷன்) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பிறந்த தினம் 27 - 5 89, 96 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (1059)

17½ தும்புக் கரணுடி இணைப்படகு (சீனோர் தயாரிப்பு) வெளி இணைப்பு யந்திரம், வலைகள் எல்லாம் செற்றாக விற்பனைக்கு உண்டு. ஐயனார் கோயிலடி, விமானவில் காரைநகர். (1 67

E Y தொடர் இலக்க Side walve Morrisminor கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு; T. தம்பிராசா, "பவுர்ணமி" புதிய செம்மணிவீதி, கல்வியங்காடு (11474)

பாவித்த மேசைகள், கதிரைகள், சைக்கிள்கள் மின்விசிறிகள், T. V. வேறு சகல வீட்டு தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. செல்லக்கண்டு, 27/14, துரையப்பா ஒழுங்கை, ஈச்சமோட்டை, கண்டுக்குளி. பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 1 மணி வரை. (1076)

அல்சேசன் பெண் 2 மாத குட்டி பன்ரம் குஞ்சுகள் அடைவைக்கும் முட்டைகள் ஒன்று பத்து ரூபாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 249, பலாலி வீதி, கந்தர்மடம். (11469)

Honda மோட்டார் சயிக்கிள் C.D. 125 பிறவுண் ராங் 1 நஷனல் டெக் 340 ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு 57 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். (11468)

### கோழிக் குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சு, சேவல் குஞ்சு, (Cobb) புறொயிலர் குஞ்சு (12.07.89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1064)

### கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை புதிய, பழைய திட்டத்திற்கமைய 22 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று 2 மாதத்திற்குள் விசேட சித்திக்கு சகல போசன்களும் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி. (1071)

S. K. ஜீவமோகனின் G.C.E (O/L) 89 விசேட கணித, விஞ்ஞான வகுப்புக்கள் கோப்பாய் சைன் இன்ஸ்ரிரியூசனில் நடைபெறுகின்றன உடன் தொடர்பு கொள்க. சைன் இன்ஸ்ரிரியூசன், கோப்பாய். (11424)

### மணமகள் தேவை

யாழ் இந்து 34 வயது, டென்ரல் டாக்டருக்கும், 28 வயது இரண்டு குருகுலப் பெண்களுக்கும், பெருமாள் கோயிலடி 26 வயதுப் பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி சாய்யாத்தேட்டம், (1074)

### மணமக்கள் தேவையா?

உங்கள் பருவ மங்கையர் கழுத்தில் தாலி ஏற வேண்டுமா? மங்களமான அலுவலுக்குநாட வேண்டிய இடம்: மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (1075)

### தேவை

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு முன் அனுபவமுள்ள லேத்மன் உடன் தேவை. நேரில் வரவும் டயானி இன்டஸ்ரீஸ் இல. 224, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (11459)

### வான் விற்பனையாளர் தேவை

யாழ். நகருக்கு வெளியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு நன்கு அனுபவமுள்ள (Van Salesman) தேவை. தகுந்த சம்பளமும் கமிஷனும் வழங்கப்படும். தொடர்பு 560, C/o உதயன், யாழ்ப்பாணம். (1069)

### G. C. E. (O/L) New Syllabus

கணித பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கு 10 மாதிரி வினாத்தாள்கள் (ஐந்து வினாத்தாள்கள் விடைகளுடன்) இலவச அனுபந்தமாக 300 பயிற்சி வினாக்களைக் கொண்டது. விடுமுறைக்கு பயிற்சி பெறவும் திறமைச் சித்திக்கு வழிகாட்டும் கைநூல் விலை ரூபா 37/50 உயர் கல்விப் பதிப்பக வெளியீடு புத்தகசாலையை அணுகுக. (11473)

### MUSIC

Piano and Accordian-Lessons for Females Mrs Thomas St. Mary's Road, Sillalai. (1058)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

### ஜோதிடம்

வியாழ மாற்றம் எங்கும் கிடைக்கும். இலங்கை ராசியை சனி ராகு, கேது பார்ப்பதால் அரசட்டமும், இரத்தக் களரிகள் உச்ச கட்டமும் ஏற்படும். நூலாசிரியர் (ஆத்ம ஜோதி) Prof. சத்தியதாசன் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1072)

### மணப் பெண்கள் தேவை

யாழ். இந்து வேளாளர் செவ்வாய் உள்ள டாக்டருக்கு 30 வயதிற்குட்பட்ட டாக்டரும், 30 வயது இரண்டு சிவில் எஞ்சினியருக்கும், 28 வயது ஆசிரியருக்கும், 37 வயது எக்கவுண்டனுக்கும், 35 வயது சண்டித் தொழிலாளிக்கும் கத்தோலிக்க 31 வயது எக்கவுண்டனுக்கும்தேவை, மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (1073)

### புத்தகம்

ஆண்டு 11 பாடநூலுக்கான ஆங்கிலப் பயிற்சிநூல் புதிய பதிப்பு) New Class work Book for English year 11 (Pupil's Book 5) வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (1040)

### மணமகள் தேவை

கொழும்பில் வசதியான சொந்த வர்த்தகம் செய்யும் 32 வயதுடைய யாழ். இந்து வேளாள மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த நற்பண்பும், அழகுமுடைய மணமகள் தேவை. (பூரட்டாதி நட்சத்திரம், கும்பராசி லக்கினத்தில் சனி, இரண்டில் செவ்வாய்) தொடர்பு கொள்க: 557, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (1057)


## ஜனாதிபதிக்கே உரிமை!

கொழும்பு, ஜூலை 9 ஊரடங்குச் சட்டத்தை பிரகடனம் செய்யும் சிறப்புரிமை ஜனாதிபதிக்கே உண்டு.

வேறு எவராலும் பிரகடனஞ் செய்யும் ஊரடங்குச் சட்டம் செல்லுபடியாகாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. (உ எ)

## பனிப்பூச்சி பூஞ்சணம் தாக்கத்தினால்...
# பம்பாய் வெங்காயச் செய்கை
# அராலிப் பகுதியில் பெரும் பாதிப்பு
## விவசாயிகளுக்கு விசேட ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 9 அராலிப் பகுதியில் தற்பொழுது நிலவும் உயர்வெப்பம், மண், நீர் ஆகியவற்றின் உவர்த்தன்மை, உஷ்ணமான காற்று ஆகியவற்றின் தாக்கத்தினால் பரவலாக எங்கும் பம்பாய் வெங்காயப் பயிரில் தாள்நுனிகள் கருகுகின்றன.

பல தோட்டங்களில் "பனிப்பூச்சி' எனும் ஒருவகைப் பூச்சியின் தாக்கத்தையும் 'ஸ்கெலரோட்டியம்' எனப்படும் ஒருவகைப் பூஞ்சண நோயின் தாக்கத்தையும் அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

இந்தப் பீடை நோயினாலும் மேற்படி இயற்கைக் காரணிகளாலும் வெங்காயத்தின் நுனி கருகுவதோடு பூஞ்சண நோயின் தாக்கம் தீவிரமடைகிறது.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. த. பத்மநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பனிப்பூச்சிகள் மிகவும் சிறிய பூச்சியாகும். வெங்காயத் தாள்களில் இருந்து சாற்றை உறுஞ்சுவதனால், தாள்கள் வெளிறி உலர்ந்துவிடும். தாள்களில் உராய்வினால் ஏற்பட்டது போன்ற சிறிய வெளிறிய காயங்களைக் கவனிக்கலாம். புறங்கையை நீரில் நனைத்து தாள்களைத் தடவிப் பார்த்தால் புறங்கையில் இச்சிறிய பூச்சிகள் ஒட்டி ஊர்வதை அவதானிக்கலாம்.

இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த லெபிசிட் 500 கரை திரவம், செவின் எக்ஸ். எல். ஆர். 48 வீத கரை திரவம், காபறில் 85வீத கரையுந்தூள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை விசிறலாம்.

உஷ்ணமும் மண்ணின் ஈரப்பற்றும் அதிகரிக்கும்போது 'ஸ்கெலரோட்டியம்' பூஞ்சண நோய் தீவிரமடையும். இதனால் தாக்கப்பட்ட பயிரின் தாள்கள் மேலிருந்து கீழ் நோக்கி மஞ்சள் நிறமடைந்து வாடிக் கருகும். வேர், குமிழ் ஆகியவற்றில் அழுகல் ஏற்படும்.

இந்நோயைக் கட்டுப்படுத்த பின்வரும் பூஞ்சண நாசினிகளுள் ஒன்றை 30 கிராம் அளவு எடுத்து நீருடன் கலந்து ஏக்கருக்கு 60 கலன் கலவையை விசிற வேண்டும்.

றொய்சின் எம் 50வீத கரையும் தூளை 8 கலன் நீரிலும் ஹோமாய் 50வீத கரையும் தூளை 8 கலன் நீரிலும் மோனூட்80வீதகரையும்தூளை 4 கலன் நீரிலும் ரெற ‘குளோர் 75வீத கரையும் தூளை 3 கலன் நீரிலும் கப்ரான் 50 வீத கரையும் தூளை 2 கலன் நீரிலும் கப்ரான் 80 வீத கரையும் தூளை 3 கலன் நீரிலும் கலந்து விசிற வேண்டும்.

இக்கலவையை 8 முதல் 10 நாட்கள் இடைவெளியில் திரும்பவும் ஒருமுறை விசிற வேண்டும்.

மிதமிஞ்சிய நீர்ப்பாசனத்தைத் தவிர்த்து அளவான நீர்ப்பாசனம் செய்தல் அதி முக்கியமாகும்.'

— இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ- 2)

## சாவகச்சேரி, சுன்னாகத்தில் தேசிய சேமிப்பு வங்கிகிளைகள்

சாவகச்சேரி, சுன்னாகம் பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் திறக்கப்படவுள்ளன.

இதற்கான அங்கீகாரத்தை தேசிய சேமிப்பு வங்கியின் தலைமைப் பீடம் வழங்கியுள்ளது. (ஒ-10)

## பனை அபிவிருத்தித் திட்டம்; 7 லட்சம் டொலர் நிதி உதவி

அரியாலை, ஜூலை 9 இலங்கை பனை அபிவிருத்திச் சபைக்கு வெளிநாட்டு உதவித் திட்டத்தின்கீழ்சுமார் 7லட்சம் அமெரிக்க டொலர் உதவியாகக் கிடைக்க உள்ளது.

இதற்கானஒப்பந்தம் ஒன்று இம்மாத நடுப்பகுதியளவில் இலங்கை அரசிற்கும்' ரோமில் உள்ள ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்திற்குமிடையில் கைச்சாத்தாக இருக்கிறது எனத் தெரியவந்துள்ளது.

இலங்கை பனை அபிவிருத்திச் சபையும், ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகமும் இணைந்து பனை அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளன.

பனையை நம்பி வாழும் மக்களின் பொருளாதார அபிவிருத்தியினை மையமாகக் கொண்டும், பனைவளத்தினை முழுமையாகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே மேற்படி உதவித்தொகை கிடைக்கவிருப்பதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராஜா தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்ப விருப்பதாகவும் அதற்கான அடிப்படை வேலைகள் சபையினால் தற்பொழுதே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-13)

## உரும்பராயில் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 09 உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கதிர்காம உற்சவ திருநாட்கள் 3 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின.

இவ்விழாக்கள் 20 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

தினமும் காலை 7 மணிக்கு வசேட பூசையும் 12 மணிக்கு உச்சிக்காலப் பூசையும் மாலை 3 30 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனையும் மாலை 4 மணிக்கும் சுவாமி எழுந்தருளலும் நடைபெறும்.

13 ஆம் திகதி கார்ப்பூரத் திருவிழாவும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ச)

## சட்டவிரோத இறைச்சிக் கடை

ஊர்காவற்றுறை, ஜூலை 9 ஊர்காவற்றுறை, நாரந்தனை ஆகிய இடங்களில் சட்டவிரோத இறைச்சிக் கடைகள் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அனுமதி பெற்ற இறைச்சிக்கடைகள் ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் இருக்கின்றபோதிலும் இவ்வாறான சட்டவிரோத இறைச்சிக்கடைகளால் ஒழுங்கு மீறப்படுவதாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-16)

## பாலர் பாடசாலை

கொக்குவில், ஜூலை 9 வணக்க ஸ்தலங்களுடன் இணைந்த பாலர் பாடசாலைகளும் பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களும் அமைக்கும் திட்டத்திற்கமைய யாழ். மாவட்டக் கல்விப் பிராந்தியத்தில் நான்கு இடங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது. (ச-169)


## 31 ஆம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு:
31-10-1932

உதிர்வு:
10-06-1989



திருமதி
ரேசலின் அந்தோனிப்பிள்ளை

எங்கள் குல விளக்கு! அன்பின் தெய்வம்! எம்மை இவ் உலகில் நல்வாழ்வு வாழ வழியமைத்த அன்னை! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ள இறைபதம் நாடிச் சென்று விட்டீர்கள். நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம் இதயத்தை விட்டு என்றும் அகலாது உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில்கலந்து கொண்டும், அனுதாபச்செய்திகளை அனுப்பிவைத்தோர்களுக்கும் உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் 10 07 89 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக புனித அச்சுநகர் புனித சூசையப்பர் தேவாலயத்தில் நடைபெறவிருக்கும் திருப்பலியிலும் அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும்கலந்து கொள்ளும்படி உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ரேஸ்மகால்,
[illegible] (11453)

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



திரு. சி. நா. கனகரத்தினம்
(உரிமையாளர்: 'நாகலிங்கம்ஸ்' - பருத்தித்துறை. 'நாகபாக்கியம் தோட்டம்' - முல்லைத்தீவு)

தோற்றம்: 11 - 11 - 1927
மறைவு: 12 - 06 - 1989

சுக்கில வருடம் வைகாசி மாதம் 29 ஆம் நாள் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தபால் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல்வேறு வகைகளால் உதவியவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், எமது இல்லத்தில் 11 - 07 - 1989 செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
- குடும்பத்தினர்

'சரஸ்வதி வாசம்'
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. [11487]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்
09 · 07 · 1989



திரு. தம்பிப்பிள்ளை சிவசங்கரநாதன்

தோற்றம்: 09 - 10 - 1912
மறைவு: 09 - 06 - 1989

எமது குடும்பத் தலைவரின் மறைவுத் துயல் பங்கு கொண்டோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு (09 - 07 - 89) ஞாயிற்றுகிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''தணிகை''
உரும்பராய் மேற்கு.
உரும்பராய். [சி-2748]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேசத் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் எழுதிய ''மூன்று நாடுகள் அறுபது நாட்கள்'' என்ற பயணக் கட்டுரையின் முதற் பிரதியை வட பிராந்திய போக்கு வரத்துச் சபையைச் சேர்ந்த திரு. நா. பத்மநாதன் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பொருளாளர் திரு. இ. தவகோபாலிடமிருந்து பெற்றுக் கொள்ளும் போது எடுக்கப்பட்ட படம். (உ)

# இந்தியாவுடனுன உறவை துண்டிக்க எஸ்.டி.கோரிக்கை

கொழும்பு ஜூலை 9

இந்தியாவுடனுன ராஜதந்திர உறவை துண்டிக்கும்படி இலங்கை அரசுக்கு ஸ்ரீலங்கா தேசபக்த ஐக்கிய முறபோக்கு முன்னணித் தலைவர் எஸ். டி. பண்டாரநாயக்கா கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இந்த முன்னணியில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம், பௌத்த பிக்குகள் முன்னணி ஆகியன அங்கம் வகிக்கின்றன.

இந்தியா, இலங்கையின் இறைமையை மதிப்பதாக இல்லை. இம் மாத முடிவினுள் அமைதிப்படை விலக வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா நிராகரித்து விட்டது. ஆகவே இந்தியாவுடனுன ராஜதந்திர உறவை இலங்கை அரசு துண்டிக்க வேண்டும்.

இதற்காக எனது தலைமையிலான முன்னணி போராடும். இப்படி திரு. பண்டாரநாயக்கா பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (உ - எ)

## தையல் பயிற்சி நிலையம்

சுழிபுரத்தைச் சேர்ந்த பறுளை வீதியில் தையல்பயிற்சி நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. (ச-28)

# யாழ் ஆஸ்பத்திரி ஐந்து மாடிக் கட்டட வேலை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

இடை நிறுத்தப்பட்ட யாழ். ஆஸ்பத்திரி ஐந்து மாடிக் கட்டடத்தின் அமைப்பு வேலைகள் மீண்டும் அடுத்த மாத முற்பகுதி முதல் ஆரம்பமாகும்.

இக்கட்டட வேலைக்கான நிதி யாழ். செயலகம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

87 ஆம் ஆண்டு அக்டோபருக்குப் பின் இக்கட்டட அமைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கட்டட வேலைகளை தனியார் ஒப்பந்தக்காரர் மூலமே தொடர்ந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை கட்டடத் திணைக்களம் இந்த வேலைகளை மேற்பார்வை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று அடுத்த வாரம் யாழ். செயலகத்தில் நடைபெற விருப்பதாகவும் தெரியவருகிறது.

வேலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு கட்டட ஒப்பந்தக்காரருக்கும், கட்டடத் திணைக்களத்துக்கும் இன்னும் சில தினங்களில் வழங்கப்படும் எனத் தெரியவருகிறது. (உ-10)

## வேலைக்குவர பணிப்பு

கொழும்பு, ஜூலை 9

அரச ஊழியாசகலரும்நாளை திங்கட்கிழமை வேலைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று அரசாங்கம் பணித்துள்ளது:

சமுகமளிக்க முடியாதவர்கள் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் தத்தம் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ ★

போக்குவரத்து ஊழியர் அனைவரும் தத்தமது வேலைத் தலங்களுக்கு உடனடியாகச் செல்ல வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஓ-எ)

## கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு வீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு வீதம் இவ் வருடமும் வீழ்ச்சி அடையவில்லை.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 46 கர்ப்பிணித் தாய்மாரும் இவ் வருடம் கடந்த ஆறு மாதத்தில் 16 கர்ப்பிணித்தாய்மாரும் மரணமடைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

நாட்டில்நிலவும்சூழ்நிலைகள் காரணமாக ஒழுங்கானசுகாதார மேற்பார்வை மேற்கொளள்முடியவில்லைஎன்றும்-

இதனாலேயே இறப்பு வீதத்தை குறைக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் யாழ். மாவட்டத்திலேயே கர்ப்பிணித்தாய்மாரின் இறப்பு வீதம் அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## மத்தியஸ்தத்தை இந்தியா விரும்பவில்லை

புதுடில்லி, ஜூலை 9

இலங்கையுடனுன தகராறில் மூன்ருவது நாடு ஒன்று தலையிட்டு மத்தியஸ்தம் செய்வதை இந்தியா விரும்பவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடலாம் என்ற செய்திகள் பற்றி புதுடில்லி வெளியுறவு வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன. (உ-எ)

## கொள்ளை

வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியில் கடந்த புதன் கிழமை இரவு ஒரு வீட்டில் இருந்து 5 ஆயிரம் பா பெறுமதியான நகைகள் பொருள்கள் பணம் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரியவந்தது. (ஓ-..)

## திருமலையிலிருந்து லொறிமூலம் மா எடுத்துவரும் ஊழியரை ஊக்குவிக்க முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலை சென்று மா எடுத்து வரும் ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாதுகாப்பு நிதியம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றன.

யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து லொறிகளை திருமலைக்கு அனுப்பி மா எடுத்து வருவது தெரிந்ததே.

திருமலை செல்லும் ஊழியர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பு நிதி உதவவும் இந்நிதியம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

ஊழியர்கள் திருமலை செல்ல அச்சம் கொண்டிருந்ததை அடுத்தே இந்நிதியத்தை ஆரம்பிக்க ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (உ- 3)

## மிளகாய் விலை உயர்வு வெங்காய விலை வீழ்ச்சி

பண்டத்தரிப்பு, ஜூலை 9

செத்தல் மிளகாயின் விலை உயர்ந்துள்ளது. அதேவேளை வெங்காயத்தின் விலை ஒரேயடியாகச் சரிந்து விட்டது.

சந்தைகளில் 40 ரூபாவிலிருந்து 46 ரூபா வரை தரத்திற்கு ஏற்ப விலைபோன செத்தல்மிளகாய் இன்று கிலோ 60 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கிலோ 10 முதல் 12 ரூபா வரை விற்ற வெங்காயம் தற்போது ரூபா 5, 6 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

கொழும்புச் சந்தைக்கு வெங்காயத்தை அனுப்புவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாகவே வெங்காய விலை வீழ்ச்சியடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. [உ-ச-120]

## விடுதலையானுர்

யாழ்ப்பாணம்' ஜூலை 9

யாழ் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவன் ஒப்பிலாமணி விஜயகுலன் கடந்த வியாழனன்று விடுதலை செய்யப்பட்டார். (ஓ 3)

## சுயதொழில் கடனுக்கு உறவினர் பிணை போதும்

### மக்கள் வங்கி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக வழங்க இருக்கும் கடன்களுக்கு குடும்ப அங்கத்தவர் பிணை நின்ருல் போதுமானது.

— இப்படிக் கூறினுர் மக்கள் வங்கி கடன் வழங்கும் பிரிவு அதிகாரி திரு. எஸ். இராமலிங்கம்.

யாழ். நாவலர் மண்டபத்தில் சனசமூக நிலைய தொண்டர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கில் பேசுகையில் இத்திட்டம் பற்றி அவர் மேலும் கூறியதாவது;

''பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள், ஒரு குறிப்பிட்ட துறையில் பயிற்சி பெற்று அத்துறை மூலம் தொழில் ஆரம்பிக்க விரும்பினுல் வங்கியில் கடன் பெறலாம்.

அக்கடனுக்கு விண்ணப்பிப்பவரின் தந்தையார், அல்லது தொழில் பார்க்கும் குடும்ப அங்கத்தவர் பிணையாக நிற்கலாம்.

இத்தகைய கடனுக்கு 18 வீத வட்டி அறவிடப்படும். ஒழுங்காக தவணைப்பணத்லை கட்டிவந்தால் வட்டியித மூன்று வீதம் கழிக்கப்பட்டு 15 வீத வட்டி அறவிடப்படும் வாய்ப்பும் உள்ளது — என்ருர். (உ-3)

## ஈழப் பிரகடனம்; ஆதரவாக சென்னையில் ஊர்வலம்

சென்னை, ஜூலை 9

★ 'இலங்கையில் தமிழர் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும்'

★ தமிழீழ பிரகடனத்திற்கு இந்தியா உதவ வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து தமிழக தலைநகர் சென்னையில் கடந்த புதனன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

ஊர்வலத்தை தமிழீழ விடுதலை இயக்கம், ஹிந்துஸ்தான் முன்னணி ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

சென்னை வள் வர் கோட்டத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம், சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதுவர் காரியாலயம் வரை சென்றது. அங்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. [உ-9]

## வவுனியாவில் கடும் மழை

கடந்த பல மாதங்களாக வரண்டு கிடந்த வவுனியா நகரில் கடந்த வாரம் கடுமையான மழை பெய்துள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைப்பிரிவின் அபிவிருத்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவையினுல் இராமநாதன் நுண்கலைப் பிரிவின் அபிவிருத்தி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஓர் உயர்மட்டக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இராமநாதன் நுண்கலைப் பிரிவின் வருங்கால அபிவிருத்தியில் ஆர்வமும், அக்கறையும் கொண்டவர்களிடமிருந்து இது பற்றிய ஆலோசனைகள் கோரப்படுகின்றன. இவற்றினை வழங்க விரும்புபவர்கள் தங்கள் ஆலோசனைகளை எழுத்து மூலம் ஜூலை மாதம் முடிவடைவதற்கு முன் கீழே தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் வேண்டப்படுகின்றனர்.

பதில் பதிவாளர்.

கலைப்பீடாதிபதி,
கலைப்பீடாதிபதி அலுவலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/3033)

பிரயாண ஒழுங்குகள்

ஜேர்மன், இத்தாலி, கனடா போன்ற

வெளிநாடுகளுக்கான பிரயாணஒழுங்குகள் துரிதமாகச் செய்து கொடுக்கப்படும்

16 வயதிற்குட்பட்டோர் ஜேர்மன் செல்ல ஒவ்வொரு கிழமையும் ஒழுங்குகள் உண்டு.

மத்திய கிழக்குநாடுகள், தாய்வான், சைப்பான் போன்ற இடங்களில் விசாவுடன் வேலை வாய்ப்பு

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

INTERNATIONAL TRAVELS GROUP [PVT] LTD,
No 7, Nandana Gardens,
Bambalapitiya,
COLOMBO - 4

கிளை
13, Hospital Rd,
Jaffna.

(சி/3031)

UNITED KINGDOM
ஐக்கிய இராச்சியம்

U. K.இல் நீங்கள் விரும்பும் விமான நிலையத்தின் ஊடாக சென்றடைவதற்கு பிரச்சினையற்ற பிரயாண ஏற்பாடு. பயண ஒழுங்குகள் ஒரு மாதத்திற்குள்.

P. V. MURTHI
2nd Floor, 'Pilgrimways Building'
253 2/1 Galle Road,
Bambalapitiya,
COLOMBO - 4
(Thomas Cook காரியாலயத்திற்கு அருகில்)

நாஷனல் சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு வாரம் ஒரு பயண ஏற்பாடு

விபரங்களுக்கு:

NATIONAL SHIPPING AND TRAVEL
New Lalitha Building,
185/2, Kasthuriar Road,
JAFFNA.

(C/2958)

உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள் (10-7-89) திங்கட்கிழமை பகல் 9.10 மணி தொடக்கம் 10.30 மணிக்குள் வரும் சிங்க லக்கின சுபவேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் தங்கவேல் அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி கலைவாணி அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்தபடி நல்லூர் சிவன் கோயிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கும் அதன் பின்பு மணமகள் இல்லத்தில் இடம்பெறும் மதிய போசன விருந்திற்கும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்;

திரு. திருமதி அ. பொன்னுத்துரை,
175/5, [illegible]
யாழ்ப்பாணம். (11476)

திரு. திருமதி செ. குமாரசாமி,
[illegible] சந்தடி,
இணுவில்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் 1989 ஆம் ஆண்டு திருவிழாவுக்கான தற்காலிக சந்தைகளில்;

(1) நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையில்,

(2) பண்டார மாளிகை வளவில் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்திற்கு கிழக்குப் பக்கக் காணியில் கடைகளுக்கான நிலம், ஐஸ்கிறீம் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம்

ஆகியன வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 24 - 07 - 89 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள், கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா. 25/- உம், மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணைப் பணமாக ரூபா. 250/- உம் செலுத்துவதன் பேரில் 21 - 07 - 89 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 24 - 07 - 89 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் நானுவித வருமானப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெறறுக் கொள்ளலாம்.

பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 07 - 07 - 89.

[சி 2747]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து புதுடில்லியில் பண்ருட்டி பேச்சு

## தீர்ப்புக்கு 3 வழிகளையும் தெரிவித்துள்ளாராம்

புதுடில்லி, ஜூலை 9

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க மூன்று வழி முறைகளை- ஆலோசனைகளை- இந்திய அரசுக்கு தமிழக முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் வழங்கியுள்ளார்

இத்தகவலை அவரே தெரிவித்தார்.

திரு. இராமச்சந்திரன் பத்து நாட்களாக புதுடில்லியில் தங்கியிருந்து இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி இந்தியப் பிரதமரின் செயலக உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

பிரதமர் காந்தியையும் அவர் சந்திக்க விரும்பினார். திரு. காந்திக்கு உத்தியோக அலுவல்கள் நிறைய இருந்ததன் காரணமாக அச்சந்திப்பு இடம்பெறவில்லை.

சென்னை திரும்பிய திரு. இராமச்சந்திரன் அடுத்த பத்துத் தினங்களை கழித்து மீண்டும் புதுடில்லி சென்று பிரதமரைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை திரும்பும் முன்னர் பண்ருட்டி இராமச்சந்திரன் செய்தியாளரைச் சந்தித்தார்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க மூன்று மாற்று வழிகளை நான் இந்திய அரசுக்குக் கொடுத்துள்ளேன். அவற்றை இப்போது வெளியிடவிரும்பவில்லை''- என்று அப்போது அவர் சொன்னார். (உ-எ)

## ஏழாவது தமிழாராய்ச்சி மாநாடு

கொழும்பு, ஜூலை 9

ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மகநாடு டிசம்பர் மாதத்தில் மொறிஷியஸில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பேராளராகவோ அல்லது பார்வையாளராகவோ பங்குபற்ற விரும்புபவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ''செயலாளர், இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு, 244, காலி வீதி, த. பெ. இல. 1700, கொழும்பு-04'' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

# தகுதிக்கு ஏற்ற தொழில் இல்லை; மாணவர் எதிர் காலம் இருள்!

## தொழிற் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து உரை

நெடுந்தீவு, ஜூலை 9

பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் முறையான கல்வியைப் பெற்றுக் கொண்டு வெளியேறும் மாணவர்களின் தகுதிக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காத நிலையில் அவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக அமைந்து விடுகிறது.

எமது வளங்களும் திறமைகளும் வெளிப்படக்கூடியதான கல்வியைப் பெற்று அதற்கு உகந்த தொழிலைப் பயிலாது விட்டதே நமது இந்நிலைக்குக் காரணம்.

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் முறைசாரக் கல்வி நெறிப் பாடமான ''புத்தகம் கட்டுதலும், கடதாசி உற்பத்தியும்'' என்னும் தொழிற் பயிற்சி வகுப்மைத் தொடக்கி வைத்துப் பேசிய யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர்செல்வி திலகவதி பெரியதம்பி மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். தியாகராசா பேசும்போது; ''புத்தகக் கல்வியைப் பரீட்சைக்கு ஏற்ற வகையில் கற்று எந்தப் பயனையும் நாம் பெற முடியாது. வாழ்க்கைக்கு ஏற்ற தொழிற் கல்வியே ஒரு நல்ல எதிர்காலத்தைஉருவாக்க உதவும் என்றார்.

தொழில் முன்னிலைக்கல்வி அதிகாரி திரு,கே.சுப்பிரமணியம் பேசுகையில்; முறைசாராக் கல்வியைக் கற்பதில் இப்பொழுது பலர் ஆர்வம் காட்டினாலும் தொழிலில் ஏற்றத்தாழ்வு பேணும் வர்க்கத்தினரால் நமது சுதேச தொழில் ஆற்றல்கள் அருகி வருவதைக் காண்கின்றோம்.

அவற்றை வளர்க்க எம்மிடையே சமநோக்குடைய நல்ல மனப்பாங்குகள் வளர வேண்டும் என்றார்.

உப அதிபர் திரு. எஸ். சின்னத்தம்பி ஆசிரிய ஆலோசகர் திரு.எஸ்.சிதம்பரநாதன் ஆகியோரும் பேசினார்கள். (ச-11)

ஐந்து நாடுகள் பங்குபற்றும்

# போட்டியை ஒத்திவைக்க இந்தியா கோரிக்கை!

கொழும்பு, ஜூலை 9

இம்மாத முற்பகுதியில் இலங்கை சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற இருந்த - ஐந்து நாடுகள் கலந்து கொள்ளும் - மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க செப்டெம்பர் மாதத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் இலங்கை உட்பட இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகள் கலந்து கொள்ள இருக்கின்றன.

இப்போட்டியை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது. (உ- 6)

# புதிய விவசாயச் செய்முறைகளை மேற்கொள்வது அவசியம்

## விவசாயப் போதனாசிரியர் உரை

பண்டத்தரிப்பு, ஜூலை 9

'பயிர்ச் செய்கையில் புதிய விவசாயச் செய்கை முறைகளை மேற்கொள்ள வேண்டும்' நஷ்டத்தைத் தவிர்த்து, உற்பத்தியைப் பெருக்கி, அதிக இலாபத்தைப் பெற முயற்சி எடுக்க வேண்டும். இன்றைய அதிகரித்த தேவைக்கு ஈடு கொடுக்க முடியாத'எமது பழைய பாரம்பரிய பயிர்ச் செய்கை முறைகள் மாற்றப்பட வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.'

மேற்கு யாழ்ப்பாண விவசாயப் போதனாசிரியர் திரு. ரி. ஏ. தம்பியப்பா மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பு அரசடி வீதி சனசமூக நிலைய மண்டபத்தில் விவசாய விரிவாக்க அலுவலர் திரு. என். அழகரத்தினம் ஏற்பாடு செய்த ''நவீன முறைகளை விவசாயத்தில் கைக்கொள்ளல்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில், திருந்திய விவசாயமுறையால் சிறு துண்டுக் காணியிலும் அதிக லாபம் பெறமுடியும்.

அளவான உரம் இடல், காலமறிந்து இ ல், மாற்றுப் பயிர்ச் செய்கை, மண்ணின் தன்மைக்கு ஏற்ற பயிர்ச் செய்கை, வருமுன் காக்கும் பீடை தவிர்ப்பு நடவடிக்கை போன்ற விடயங்களை விவசாயிகள் அறிந்து செயற்பட தொழில் நுட்ப விவசாயக் கருத்தரங்குகளில் பங்கு கொள்வது அவசியம் என்றார்.

தொல்புரம் கமநல சேவை விரிவாக்க நிலையப் போதனாசிரியர் திரு. ரி. சண்முகசுந்தரம் இலாபம் தரவல்ல புதிய பயிர்வகைகள் பற்றி விளக்கினார்.

விவசாயப் போதனாசிரியர் திரு. சி.கே.கந்தசாமி உட்பட வேறு சில விவசாய விரிவாக்க நிலைக்கள உத்தியோகத்தர்களும் உரையாற்றினர்(1-20)

# அக்குபஞ்சர் முறையினால் வைத்தியத்துறை மறுமலர்ச்சி

'எதிர்விளைவுகள், சிகிச்சையின்போது ஏற்படும் நோவுகள் எதுவுமின்றி இலகுவாக மேற்கொள்ளப்படும் வைத்தியமுறையே அக்குபஞ்சர் வைத்தியமுறை. உலகநாடுகளெல்லாம் இம்முறையை ஏற்றுக்கொண்டு வைத்தியத் துறையில் ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன'.

வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 34ஆவது கருத்தரங்கில் உரையாற்றிய வட இலங்கை அக்குபஞ்சர் வைத்தியசங்கத் தலைவர் டாக்டர் எஸ். ரி. புவிராஜன் இவ்வாறு கூறினார்.

டாக்டர் எஸ். ரி. புவிராஜன் மேலும் கூறியதாவது:-

தற்கால வைத்திய முறைகளால் கர்ப்பமடையாத பெண்களுக்கு அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் கர்ப்பம் தரிக்கச் செய்வதில் டாக்டர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

நாட்பட்ட வருத்தங்கள், பாரிசவாதம், ஆஸ்மா போன்ற நோய்களுக்கு மட்டுமல்ல, பேசமுடியாதவர்கள், நடக்க முடியாதவர்களுக்குக் கூட அக்குபஞ்சர் வைத்தியத்தின்மூலம் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மருத்தீட்டு ரோகங்களுக்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட வயிற்றுப்புண், புற்று நோய் போன்ற சகலரோகங்களுக்கும் அக்குபஞ்சர் சிகிச்சைமூலம் சிறந்த பலனைக் காணமுடியும்.

மருத்தீட்டுகளினால் ஏற்படும் உடல் இளைப்புக்கள், தேக பாதிப்புக்களையும், நச்சு தன்மைகளையும் இச்சிகிச்சையினால் குணப்படுத்த முடியும்.

இப்படி அவர் கூறினார்.

சங்கச் செயலாளர் திரு. எஸ். ரி. பூரணேஸ்வரன் நன்றி கூறினார். (ச-90)

# அடையாள வேலைநிறுத்தம் இல்லை என முடிவு

கொழும்பு, ஜூலை 9

போக்குவரத்து ஊழியரின் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது இல்லை என்று மத்திய வங்கி ஊழியர் சங்கம் முடிவுசெய்திருக்கிறது.

புதன்கிழமை சங்கத்தின் பொதுச்சபை கூடி 156 இற்கு 12 என்ற வாக்கு வித்தியாசத்தில் இந்த முடிவை எடுத்தது. (உ-எ)

# சகோதரர்கள் மூவர் காயம்

வவுனியா, ஜூலை 9

வயல் வெளியில் கிடந்த ஒரு பொருளை எடுத்துப் பார்த்த போது அது வெடித்து சகோதரர்கள் மூவர் காயம் அடைந்தனர்.

வவுனியா எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் படுகாயமடைந்த நா. பரமானந்தன் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-164)

# உடுவில் ச. ச. நிலையங்கள்

மானிப்பாய் ஜூலை 9

வலிகாமம் வடக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

புதிய உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. தம்பையா திருஞானசம்பந்தர், உபதலைவர்: திரு. சி. சின்னத்தம்பி, செயலாளர்: திரு. இ. மகாலிங்கம், உபசெயலாளர்: திரு இ. தர்மலிங்கம், பொருளாளர்: திரு. த. ஜெயசீலன். (க-90)




நிதித்துறையில் உங்கள் நண்பன்

SHABRA UNICO FINANCE LIMITED

61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073-24805


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி அக்னேஸ் டானியல் (ராசு)

திருமதி அக்னேஸ் டானியல் (ராசு) இளைப்பாறிய ஆசிரியையின் ஆத்ம சாந்திக்காக யாழ் ஆச்சிரம தேவாலயத்தில் 10-07-89 திங்கள் காலை 6 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரிவால் வாடும்:
கணவர் - மகன் (திரு).

32/21 அச்சக வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (1170)

# முதலாண்டு நினைவஞ்சலி



## அமரர் நடராஜா நித்தியானந்தன்

தமிழுக்காக மலர்வு: 02 - 12 - 1952
தமிழருக்காக உதிர்வு: 09 - 07 - 1988

திதி: 28 — 07 — 1989

எங்களின் பாச மிக்க குடும்பத் தலைவரும் எம் மண்ணில் பல் வேறு சமூகப் பணி ஆற்றியவரும் எம்மை எல்லாம்ஆறாத்துயரில் விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வத்திற்கு எமது கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பாவற்குளம்,
4ஆம் யூனிற்,
வாக்குட்டியூர். [1171]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் பா. சோபிதன்

அன்னையின் மடியில்: 27 - 06 - 1978
ஆண்டவன் மடியில்: 20 - 06 - 1988

திதி: 09 07 — 1989

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடர் ஒளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் மூத்தவனாய் மகிழ்வோடு வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு அகன்ற எங்கள் அன்புச் செல்வமே, சோபி!

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா,
தமக்கைமார், தம்பிமார்.

செ. பாலரத்தினசிங்கம்,
'சோபி இல்லம்'
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. [1156]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

**பொருள்:**
தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது: சால்பு பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது.

உதயன்
இல. 393/1, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம்: 23078
09 - 07 - 1989   த. பெ. இல. 23

# எப்படிக் கத்தியும் என்ன?

ஜனாதிபதி பிரேமதாச தலைமையிலான அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார். நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு அவர் பின்வரும் காரண காரியங்களைத் தெரிவித்திருக்கிறார்.

★ கடந்த நான்கு வாரங்களாக நாடு மிகவும் நெருக்கடி நிலையை அனுபவித்து வருகிறது.
★ போக்குவரத்து ஊழியர் வேலை நிறுத்தத்துக்கு முன் வைத்த அடிப்படைக் கோரிக்கைகளை அரசு கவனிக்கத் தவறியதே இந்த நெருக்கடிக்குக் காரணம்.
★ ஏற்றுமதிப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியவில்லை. அதே போல மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியும் தடைப் பட்டுள்ளது.
★ சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ள நிலையில் அரசு பத்திரிகைத் தணிக்கையைக் கொண்டு வந்திருக்கிறது. பொதுக் கூட்டங்களையும் அரசு தடை செய்துவிட்டது.
★ ஜனநாயக, கருத்துச் சுதந்திரங்களை அழிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

ஆகையால் இந்த அரசு உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டும் என்பது எதிர்க்கட்சித் தலைவியின் வாதம்.

இன்றைய நெருக்கடி நிலையால் அவசர காலச் சட்டத்தின் கீழ் மிகக் கடும் விதிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால் மக்களின் சகல விதமான சுதந்திரங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவான உண்மை.

மக்களின் அத்தியாவசிய தேவைகள் உட்பட இயல்பு வாழ்க்கை அடித்து வீழ்த்தப்பட்டுவிட்டது என்பது உண்மை.

நெருக்கடி நிலைக்குக் காரணமாக இருந்த வேலை நிறுத்தத்தைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவோ, மக்கள் நலனை முன்னிட்டு சிறிதளவேனும் விட்டுக் கொடுக்கவோ, தொழிற்சங்க உரிமைக்கு உரிய மதிப்பளித்து திறந்த மனதுடன் செயற்படும் போக்கைக் கடைப்பிடிக்கவோ அரசு சரியான அணுகு முறையை நாடாது பின்னடித்ததும், இழுத்தடித்ததும், அதன் உள்ளார்ந்த எதேச்சாதிகாரப் போக்கையே புலப்படுத்துகிறது.

நெருப்பை நெருப்பால் அணைக்கலாம் என்ற பிழையான கோட்பாட்டுடன், தனது அதிகாரத்தை முழு அளவில் மக்கள்மீது இடித்துடைக்க அது கங்கணம் கட்டியது எந்தச் சுதந்திரத்துக்குள்ளும் அடங்காது. தன்னிடம் அதிகாரம் இருக்கிறது, சட்டங்களின் துணை இருக்கிறது, படை பட்டாளம் உண்டு என்ற உஷாரில் அல்லது திமிரில் அரசு இவ்வித போக்கைத் தெரிந்தெடுத்திருக்கலாம். ஆனால் நடைமுறையில் மக்கள் நலனுக்கு உதவுமா என்பது பெரும் சந்தேகமே. மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையிலிருந்து, பொறுப்பிலிருந்து ஒதுங்கிவிடாமல் இருப்பதற்காகவே இந்தப் போக்கைத் தெரிவு செய்ததாகவும் அரச கட்டிலில் உள்ளவர்கள் வியாக்கியானமும் விளக்கமும் கொடுக்கக் கூடும்.

ஆனால் அவர் காலத்தின் கீழ் இதைவிட மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்ட திருமதி பண்டாரநாயக்காவுக்கு இப்போது இவற்றைச் சொல்ல என்ன யோக்கியதை என்பதே எவர் மனதிலும் முதலில் எழும் கேள்வியாகும்.

கடந்த நான்கு வாரங்களாக, தென்னிலங்கை மக்கள் படும் கஷ்டங்களைவிட, மிகவும் கொடிதான இன்னல்களை ஈழம் வாழ் தமிழ் மக்கள் அனுபவித்திருக்கிறார்கள்.

அந்த வேளைகளில் தமிழர்களின் சுதந்திரமும், ஜனநாயக வாழ்வும் பறிக்கப்படுகிறது என்று கூறி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர அவரோ அவரது கட்சியோ நினைத்தது உண்டா? கனவிலும் எண்ணியதுண்டா?

தெற்குக்கு ஒரு நீதி வடக்குக்கு ஒரு நீதி என்ற சித்தாந்தத்தைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கடைப்பிடிக்கும் வரை அவர்கள் எதை எப்படிக் 'கத்தினால்' என்ன? அதனால் தமிழர்களுக்கு ஏது பயன்? இந்தக் கேள்வியும் அவசியம் விடைபெற வேண்டிய ஒன்றே!

## சமய சந்திதிகளில்

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு பண்புலம் அருள்மிகு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய ஜீர்ணோத்தாரண [புனராவர்த்தன] அஷ்டபந்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறும். (ஈ)

### அளவெட்டி நாகேஸ்வரத்தில்

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஆனி உத்தர விழா அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புற நடைபெறும். (ஓ)

### ஆனி உத்தரம்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிதம்பர அம்பலவாணேசுரசுவாமிகளுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை ஆனி உத்தர தினத்தன்று அதிகாலை அபிஷேகமும் உற்சவமும் நடைபெறும். (ச)

★ 26 வருட இடைவெளியின் பின்னர்

# காமன்வெல்த் அமைப்பில் மீண்டும் பாகிஸ்தானைச் சேர்க்க சம்மதம்!

## செயலாளர் நாயகம் ரம்பால் பிரதமர் பெனாஸிருக்கு கடிதம்

லண்டன், ஜூலை 8
காமன்வெல்த் நாடுகள் அமைப்பில் மீண்டும் பாகிஸ்தானை ஓர் உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ள சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைப்பில் அங்கம் வகிக்கும் 48 உறுப்பு நாடுகளும் இதற்கு அங்கீகாரம் அளித்து உள்ளன.

இதை உறுதிப்படுத்திக் காமன்வெல்த் அமைப்பின் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பால் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார்.

திரு. ரம்பால் தற்சமயம் கிரனேடா தீவில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

''பாகிஸ்தானை மீண்டும் காமன்வெல்த் அமைப்பில் சேர்ப்பதை அமைப்பு உறுப்பினர்கள் வரவேற்கின்றனர்''



என்று பெனாஸிருக்கு அனுப்பிய செய்தியில் திரு. ரம்பால் தெரிவித்திருக்கிறார்.

ரம்பாலின் கடிதம் கிடைத்ததை இஸ்லாமபாத்தில் வெளியுறவு அதிகாரிகள் ஊர்ஜிதப் படுத்தினர்.

பிரதமர் பெனாஸிர் 11நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு புறப்பட்ட பின்னரே இக்கடிதம் பாகிஸ்தானுக்கு வந்தது

வருகிற அக்டோபரில் கோலாலம்பூரில் நடைபெறவுள்ள காமன்வெல்த் உச்சி மாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்ளும்.

1971 இல் இடம்பெற்ற பங்களாதேஷ் யுத்தத்தைத் தொடர்ந்து காமன்வெல்த் அமைப்பில் இருந்து பாகிஸ்தான் வெளியேறியது. அப்போது பாகிஸ்தானின் பிரதமராக திரு. ஸுல்பிகார் அலி பூட்டோ இருந்தார்.

பூட்டோவின் மகள் பெனாஸிர இப்போதைய பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஞானஸ்நானம் செய்யப்பட்டேன் கோர்பச்சேவ் அறிவிப்பு

பாரிஸ், ஜூலை 8
''நான் ஞானஸ்நானம் செய்யப்பட்டேன்''— இப்படி சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் சொன்னார்.

பிரெஞ்சு விஜயத்தின்போது செய்தியாளர் மாநாட்டில் திரு. கோர்பச்சேவிடம் ஒரு செய்தியாளர் கேட்டார்.

''உங்களைப்பற்றி ஓரளவு பிரெஞ்சுக்காரர்கள் அறிந்திருக்கிறார்கள். இருந்தும் உங்கள் வாழ்வின் பெரும் பகுதி மர்மமாக உள்ளதே. உங்கள் அம்மா கிறிஸ்தவர் என்று சொல்லப்படுகிறது. ஜனாதிபதி அவர்களே! நீங்கள் ஞானஸ்நானம் செய்யப்பட்டீர்களா?—'' இதுவே செய்தியாளரின் கேள்வி!



''ஆம். நான் ஞானஸ்நானம் செய்யப்பட்டேன். அதில் ஏதும் அதிசயம் இல்லை என்று நான் நினைக்கிறேன்''- இப்படி திரு. கோர்பச்சேவ் சொன்னார்.

1984 இல் திருமதி ரெய்ஸா கோர்பச்சேவ்-'' நான் கம்யூனிஸ்ட். கிறிஸ்தவனல்ல; ஆனால் சகல மதங்களையும் மதிக்கின்றேன்''— என்று சொல்லியிருந்தார். (எ)

# ஆப்கன் நகரங்கள் மீது தாக்குதல் நடத்த ஏற்பாடு

## லண்டன் பத்திரிகை தகவல்

லண்டன், ஜூலை 8
இம்மாதக் கடைசியில் ஆப்கனின் மூன்று நகரங்கள் மீது புதிய தாக்குதல்களை கெரில்லாக்கள் நடத்தவிருப்பதாக லண்டனிலுள்ள 'தி இன்டிபென்டென்ற்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

புதிய தாக்குதல்களை நடத்த அமெரிக்காவும் பாகிஸ்தானும் நவீன ஆயுதங்களை வழங்கவிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஜலலபாத், கோஸ்ட்; கார்டஸ் ஆகிய நகரங்கள்மீது இத்தாக்குதல்களை நடத்தவுள்ள அதேசமயம், காபூல் மற்றும் பாக்ரம் விமானநிலையங்களைத் தாக்கவும் கெரில்லாக்கள் திட்டமிட்டுள்ளனர்:

இதற்காக ஸ்ரிங்கர் ஏவுகணைகள் மற்றும் நவீன ஆயுதங்கள் பாவிக்கப்படலாம் என்றும் லண்டன் பத்திரிகை தெரிவித்தது.

முஜாஹீதின் கெரில்லாக்களின் முக்கிய ஆதரவாளர்கள் பாகிஸ்தானில் இருந்து கொண்டு தாக்குதல்களைக் கண்காணிப்பதுடன் ஆயுத விநியோகத்தையும் கவனிப்பார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# ஜப்பான் அரசியல்: கெய்ஷா பேசுகிறாள்

நாட்டின் நலன் கருதி தனது அந்தரங்க வாழ்க்கையை வெளிப்படுத்தியிருக்கிறார் 40 வயதான கெய்ஷாப் பெண்.

அவரது பெயர் மிட்சுகோ நாகனிஷி. ஓராண்டு காலம் கெய்ஷாவாக இரவு விடுதிகளில் பணி புரிந்தவர். இப்போது அலுவலக ஊழியராக கடமையாற்றி வருகிறார்.

தற்சமயம்பௌத்தவிகாரை ஒன்றில்தங்கி இருக்கும் நாகனிஷி ஜப்பானின்புதியபிரதமர் சொசுகி யூனோவிற்கும் டையேயான தொடர்புகள் பற்றி தெரிவிக்கப்போய்,அது இன்று ஜப்பான் அரசியலில் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது:

பௌத்த விகாரையில் இருந்துகொண்டு அவர் அளித்த பேட்டியில்,

''நான் தெரிவிக்கும் தகவல்கள் பிரதமர், அவரது மனைவி, பிள்ளைகளுக்கு மன வருத்தத்தை அளிக்கும். அதற்காக நான் வருந்துகின்றேன்.

''ஆனால் நாட்டின் நலன்களைப் பாதுகாக்கவும் ஜப்பான் பெண்களின் சுதந்திரத்தைப் பேணவும் பிரதமருடைய நடவடிக்கைகளை வெளியிட நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளேன்— என்று சொன்னார்.

ராய்ட்டர் செய்தியாளர் விகாரையில் அவரைச் சந்திக்கச் சென்றிருந்தபோது அவர் மஞ்சள் அங்கி அணிந்த வண்ணம் மதகுருமாருடன் அமர்ந்திருந்த சமஸ்கிருத சுலோகங்களை உச்சரித்த வண்ணம் காணப்பட்டார்:

கடந்த ஞாயிறு வரை அவரின் அடையாளம்பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

ஒரு என்வலப்பை செய்தியாளரிடம் காட்டினார், நாகனிஷி,

அந்த என்வலப்பில் திரு: யுனோவின் பெயர் பொறிக்கப் பட்டிருந்தது.

நாகனிஷியுடன்உறவுகொண்டிருந்தபோது பிரதமர் யுனோ கொடுத்த பணம் அந்த என்வலப்பில் வைக்கப்பட்டிருந்ததாக செல்வி நாகனிஷி தெரிவித்தார்:

''கெய்ஷாபெண்களுக்குரிய நிபந்தனைகளை மீறி நான் வைத்திருந்த இரகசியத் தொடர்புகளை வெளியிடுவது குறித்து வருந்தவில்லை. இது எனக்கும் பிரதமர் யுனோவுக்கும் இடையிலான தனிப்பட்ட விஷயமல்ல. அவர் பொது வாழ்வில் ஈடுபடுபவர். மக்கள் அவரைப் பற்றி அறிந்து இருக்க வேண்டும்.

''பலவீனமான பெண்கள் மீது இரக்கம் காட்டாத இவரால் மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன நன்மை கிடைக்க முடியும்?''— செல்வி நாகனிஷி இப்படிக் கேட்டார்.

''ஜப்பானுக்குத் திறமையான அரசியல்வாதிகள் தேவைப்படும் காலம் இது. கெய்ஷாக்களும் அரசுக்கு வரி செலுத்துகிறார்கள்''— என்று செல்வி நாகனிஷி குறிப்பிடுகிறார்.

நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களால் திரு. நாகசோனி, திரு. யாடிகிரோ ஆகியோர் அடுத்தடுத்து பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்தனர்.

அதைத் தொடர்ந்து பிரதமராக வந்த திரு. யூனோ இன்று கெய்ஷாப் பெண் தொடர்பு காரணமாக பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. (எ)

# நாளை நடப்பதை யார் அறிவார்? அரசியல் ஓய்வு பற்றி ஜெயலலிதா!

தீவிர அரசியலில் 3 மாதங்களாக ஒதுங்கியிருந்த பின்னர் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா முதன் முதலாக கடந்த வியாழன் தனது சென்னை போயஸ் கார்டன் இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் தெரிவித்த கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.

எனக்கு 41 வயது ஆகிறது. நான் குழந்தை அல்ல. மக்களைச் சந்திக்க மறுத்து எனது கட்சிக்காரர்களுடன் பேசவிரும்பாமல் சில காலம் நான் ஒதுங்கியிருந்தேன். அதற்கு சில காரணங்கள் உண்டு. அவற்றை நான் வெளியிடப்போவதில்லை.

ஜனநாயக நாட்டில் அந்தரங்கமாக, இரகசியத்தைப் பேணும் அடிப்படை உரிமை எனக்கு உண்டு.

சில காலம் ஒதுங்கி வாழ அரசியல் தலைவர் ஒருவர் முற்பட்டது இது தான் முதல் தடவை என்று கருதிவிட முடியாது.

### மாசேதுங்

மாசேதுங்கை எடுத்துக் கொள்ளுங்கள். அவரும் சில காலம் தனது கட்சிக்காரர்களைச் சந்திக்காமல் ஒதுங்கி வாழ்ந்திருக்கிறார்

இதை வைத்து எனது அரசியல் வாழ்வை மாசேதுங் போன்ற தலைவருடன் நான் ஒப்பிட விரும்பவில்லை. அவரின் உதாரணத்தை நான் பின்பற்றுவதாகக் கூறவும் இல்லை.

அரசியல்வாதிகள் ஒதுங்கி வாழ்வது வழமைக்கு மாறான செயல் அல்ல என்பதைக் காட்டவே இதை நான் தெரிவித்தேன்.

### தேககுகம்

நான் இப்போது நல்ல சுகமாக உள்ளேன். தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றேன்.

நான் பெங்களூரில் தங்கி இருந்தேன் என்பது உண்மை.

அங்கு சிகிச்சை பெற்று வந்தேன். எனது மாமி வீட்டில் தங்கியிருந்து வைத்திய சிகிச்சைக்காக சென்றிருந்தேன் என்பதை மறுக்கிறேன்.

### வீட்டில் சிறை

நான் சாதாரணமானவளாகவே இருக்கிறேன். எனது வீட்டின் முதலாளி நானே. வீட்டு நிர்வாகம் எனது கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

எனது சொந்த வீட்டிலேயே நான் சிறைவைக்கப்பட்டேன் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இப்படியான வதந்திகள், பேச்சுக்கள் ஆதாரமற்றவை; திட்டமிட்டுப் பரப்பப்பட்டவை.

முன்னாள் அரசு அதிகாரி திரு எம். நடராசன் என்னைச் 'சிறைக் கைதி' யாக வைத்திருக்கவில்லை.

திருமதி சசிகலா என் சிறந்த நண்பி; சகோதரி போன்றவர்; அவரின் கணவர்தான் நடராஜன்.

நடராஜன் எனது உதவியாளர் அல்ல; செயலாளரும் அல்லர்.

அவர்கள் இருவரும் எனது வீட்டில் இருப்பதால், எனது நண்பராக இருக்கிறார்கள் என் உத்தரவுகளைச் செயற்படுத்துகிறார்கள்.

எவரும் வந்து என்னைச் சந்திப்பதை அவர்களால் தடுக்க முடியாது.

நான் யாரையும் தனிப்பட்ட காரணங்களுக்காகச் சந்திக்க முடியாது என்றால், அதை நடராஜன் - சசிகலா தம்பதிகளால் கூட தடுக்க முடியாது.

இவர்கள் இருவரும் அ. தி. மு. க. உறுப்பினர்களும் அல்லர்; ஆகவே கட்சி உறுப்பினர்கள் அவர்களை சந்திக்க வேண்டும் என்ற தேவையே இல்லை;

கட்சி அலுவல்கள், அவை பற்றிய விஷயங்கள் எல்லாம் கட்சி அலுவலகம் ஊடாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே நான் கூறிவிட்டேன்.

### பொலீஸில் முறைப்பாடு

மைலாப்பூரில் அ.தி.மு.க [illegible] நடராஜன் என்பவர் நான் சிறை வைக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் கமிஷனர் துரையிடம் முறையிட்டிருக்கிறார்.


முதலில் அவரை கட்சியில் இருந்து இடைநிறுத்தி வைத்துள்ளேன் என்பதை இன்று அறிவிக்கின்றேன்.

அவரின் செயல் கட்சியை சிரிப்புக்கிடமாக்கி உள்ளது.

நடராஜன் - சசிகலா தம்பதியரை இதற்குள் இழுப்பது அநாவசியமானது.

### அரசியலில் இருந்து ஓய்வு

தற்போதைக்கு நான் அரசியலில் இருந்து ஓய்வு பெறவில்லை.



ஒரு செய்தியாளர்: தற்போதைக்கு...' என்று கூறுகிறீர்களே. அப்படியானால்...

ஜெயலலிதா (சிரித்துக் கொண்டே)— 'நாளை நடப்பதை யார் அறிவார்? நாளை நான் ஒரு விபத்தில் அகப்பட்டுக் கொண்டால்...'

நிருபர்: ஓய்வு பெறுவது பற்றி யோசிக்கிறீர்களா?

ஜெயலலிதா: மார்ச் 25ஆம் திகதி சம்பவங்களின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது பற்றி நான் யோசித்துக் கொண்டிருப்பது அனைவருக்குமே தெரியும்.

அரசியலில் இருந்து நான் விலகப்போவதாக இப்போது கூறப்படுவது வதந்தியாகும். இது அரசியல் ரீதியில் திட்டமிட்டுப் பரப்பப்பட்டது ஒன்று.

இவ் வதந்தியை எனது கட்சியில் உள்ள சில சக்திகளே பரப்பி வருகின்றன.

அவர்களை நான் அடையாளம் கண்டுள்ளேன். சரியான நேரத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்சி எம். எல். ஏக்களின் கூட்டம் இம் மாதம் 12 ஆம் திகதி நடக்க உள்ளது.

நிருபர்: கடந்த செவ்வாய் அ.தி.மு.க தலைவர்களை அழைத்து மாற்றுத்தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள். நான் ஓய்வுபெறப் போகின்றேன் என்று நீங்கள் கூறியதாகச் செய்தி வந்துள்ளதே!

ஜெயலலிதா: நான் இன்று வார்த்தைகளை தெரிவுசெய்து பாவித்துள்ளேன். அவ்வளவுதான் இன்று என்னால் சொல்ல முடியும்.

நான் இவ்வளவு காலமும் ஒதுங்கியிருந்ததற்கு சில தனிப்பட்ட கஷ்டங்கள் நிர்ப்பந்தங்கள் காரணமாக இருந்தன. எல்லாவற்றையும் மக்களுக்குச்சொல்லிக் கொண்டிருக்க முடியாது;

ஜெயலலிதா [நிருபர்களை நோக்கி]: அரசியல் சம்பந்தமான கேள்விகளை வருகிற 12 ஆம் திகதி செய்தியாளர் மாநாட்டில் கேளுங்கள்.

இச் செய்தியாளர் மாநாட்டின் போது அ.தி.மு.க சிரேஷ்ட தலைவர்கள் எவரும் சமுகமளித்திருக்கவில்லை. (எ)

## சூடானில் ஊழல் விசாரணை

கார்ட்டூம், ஜூலை 8
சூடானின் முன்னாள் பிரதமர் சாதிக்-அல்-மஹ்தி மீது ஊழல் விசாரணை நடத்தப்படும் என்று புதிய இராணுவத்தலைவர் பிரிகேடியர் பெஷர் அறிவித்தார்.

குற்றவாளியாகக் காணப்பட்டால் மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்: (எ)

## ஹஜ்ஜுச் சிந்தனைகள்

ஹஜ்ஜில் பின்பற்றப்படும் அனுஷ்டானங்கள் நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் வழிவந்த செயல்முறைகளாகும் எனவே அவைகள் அவரைப் பின்பற்றிச் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கத்தினைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன. ஆக அவர்கள் அனுபவித்த இன்னல்களில் நாம்அங்கு சென்று அனுபவிப்பது மிகக் குறைவானதே. எனவே நாம் அங்கு செய்யும் (அமல்களே) செயல்களே மிக விசேடமானது, இத்தகு பாக்கியங்களை நம்மில் எத்தனை பேர்தான் அடைந்து கொள்வார்களோ? எத்தனை பேர்தான் நபிஇப்ருஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கையை நினைப்பார்களோ?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**வி. ரி. அன்சன்ஸ்**

✱ பல் கட்டுபவரும்
✱ கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவரும்

302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C.க்கு முன்பாக)
முகாமையாளர்
**Dr. றெஜி சொலமன்**



# உதயன்

09 - 07 - 1989 ஞாயிற்றுக்கிழமை



**வி. ரி. அன்சன்ஸ்**

✱ பல் கட்டுபவரும்
✱ கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவரும்

302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C.க்கு முன்பாக)
முகாமையாளர்
**Dr. றெஜி சொலமன்**


### லியனுராச்சி வழக்கில் ஆஜரான
## சட்டத்தரணி லங்காபுர கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூலை 9

சட்டத்தரணி (வயது 34) சரித்தா லங்காபுர நேற்று முன்தினம் (வெள்ளி) இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொம்பனித் தெருவில் உள்ள அவரது வீட்டின் யன்னலூடாக மூன்றுதரம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஒரு குண்டு அவரது கழுத்தைத் துளைத்துக்கொண்டு சென்றது.

இறந்த சட்டத்தரணி மனித உரிமை இயக்கப் பிரமுகர்களில் ஒருவர். பல ஆட்கொணர்வு வழக்குகளிலும், சட்டத்தரணி லியனுராச்சி கொலை வழக்கிலும் இவர் ஆஜராகியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான சுருக்கமான செய்தி நேற்றைய சஞ்சிகையில் வெளியாகியிருந்தது. (உ-எ)

## இலங்கை - இந்திய பிணக்கு; பாதிப்பு மலையகத்தவருக்கே!

### புதுடில்லியில் தொண்டா

கொழும்பு, ஜூலை 9

இந்திய-இலங்கை நெருக்கடியால் உண்மையில் துன்பப்படுபவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே.

—அமைச்சர் தொண்டமான் புதுடில்லியில் இதனைத் தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்திய வர்த்தக யூனியன் மகாநாட்டின் இறுதியில் அமைச்சர் தொண்டமான் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது -

இலங்கை அரசின் அமைச்சராக நான் இங்கு வரவில்லை' தொழிற்சங்கத்தலைவராக வந்துள்ளேன்.

இலங்கை ஜனாதிபதியிடம் இருந்து பிரதமர் காந்திக்கு செய்தி எதையும் நான் கொண்டுவரவில்லை.

சிங்களப் பிரதேசங்களில் வசிக்கும் தமிழரின் பிரச்சினைகளை இந்தியா அறிந்துகொள்ளவேண்டும்.

—இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (உ-எ)


## அடிக்கல் நாட்டு விழா

### குரும்பசிட்டி சிவன் கோயில்

சிவனடியார்களே!

குரும்பசிட்டி முத்துமாரியம்மன் கோயிலின் அருகாமையில் 10-07-1989 திங்கட்கிழமை பகல் 10.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மேற்படி சிவன் கோயில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற உள்ளது. அடியவர்கள் அதில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- முகாமையாளர்

[11482]



## வேலை வாய்ப்பு

(1) கிறீக் கப்பல்
(2) சிங்கப்பூர் கப்பல்

பலதரப்பட்ட வேலைகளுக்கும் ஆட்கள் தேவை.
உடனடிப் பயணம்

- ஓமான்
  ரெயிலேர்ஸ்
- குவைத் - சிங்கப்பூர்
  பணிப்பெண்கள்

விரும்புவோர் நேரில் வரவும்

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

**நிரோஷன் என்ரபிறைஸ்**

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி, காங்கேசன்துறை.
[TB வைத்தியசாலை அருகில்]

[11436]


## ராஜீவ் - புஷ் தொலைபேசியில் சம்பாஷணை

வாஷிங்டன், ஜூலை 8

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பிரதமர் ராஜீவ்காந்தி, அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் தொலைபேசி மூலம் உரையாடினார்.

கடந்த 6 மாதகாலத்தில் திரு. காந்தி தொலைபேசியில் புஷ்ஷுடன் தொடர்புகொண்டது இது மூன்றுவது முறையாகும்.

அமெரிக்க சுதந்திர தினத்தை ஒட்டி வாழ்த்துத் தெரிவித்த ராஜீவின் செய்கையை வெள்ளைமாளிகை பாராட்டியது.

முதல் தடவையாக ராஜீவும் புஷ்ஷும் பாரிஸில் அடுத்த வாரம் நேருக்குநேர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த உள்ளனர். (எ)

## புலோலியில் அசம்பாவிதம்

வடமராட்சி, ஜூலை 9

புலோலி ஈசரையடியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ஒரு தரப்பினர் தாக்குதல் நடத்த மறுதரப்பினரும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். அப்போது ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது,

இதனால் சிறிதுநேரம் போக்குவரத்து ஸ்வம்பித்தது.

### சிங்கப்பூரில்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

அங்கு அவர்களை நடுத்தெருவில் தவிக்க விட்டு மறைந்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்தப்பத்துப் பேரும் மாசிலாமணி சிவராசா என்பவரின் தலைமையில் சிங்கப்பூர் பொலிஸில் சரணடைந்து நிலைமையைத் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அவர்கள் கொழும்புக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.

### ஒரு நாட்டில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்களாதேஷ் அமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனுப் மஹ்மூத் கொழும்புக்குப் புறப்பட்டார்.

ஒவ்வொரு சார்க் மாநாட்டின்போதும் இலங்கை இப்படியே இருதரப்பு பிரச்சினைகளை கிளப்பி வருவதாகவும்—

இதற்கு ஊக்கமளிக்கக் கூடாது என்றும்—

இந்திய அமைச்சர் பங்களாதேஷ் அமைச்சருக்கு தெரிவித்தார் என்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

### ராஜீவின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றத் திட்டங்களை உருவாக்கி இன விகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டு வருவதாக உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள்.

நான் இதனைத் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இப்பகுதிகளில் எவ்வித குடியேற்றத் திட்டங்களும் இடம்பெறவில்லை — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## வியாபாரிகளுக்கு எச்சரிக்கை!

வவுனியா, ஜூலை 9

வவுனியாவில் மாவுக்கு நிலவும் தட்டுப்பாட்டு நிலைமையைப் பயன்படுத்தி அதிக விலைக்கு மாவை விற்கமுயன்ற வர்த்தகர்கள்சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். இதனையடுத்து கடைகளில் மா பழைய விலைக்கே விற்கப்படுகின்றது. (உ-164)


## OBITUARY

### FLORENCE SATHIABAMA RAJASEKARAM

Florence Sathiabama Rajasekaram (nee Richards) beloved wife of late Mr. A. W. Rajasekaram, loving mother of Mathini (U.K.), Mahilrajan (Australia), Mahilini (Australia), Ranji (St. John's College, Jaffna), Kamalini (U. K.), Mother-in-law of Navanayagam (U. K.), Nirmala (Australia), Vijaya Selvaratnam (Australia), and Sathiyendran (U. K.), Grand mother of Nagulan, Jonathan, Menaka, David and Dinesh, sister of late Andrew, late Jimi, late Annammah, Packiam, Rasammah and late John, passed away.

Funeral Service will take place on 9th July, 1989 at 10 a. m. at 150/10, Station Road, Jaffna (entrance Aseerwatham Lane). Burial St. James Church Cemetry, Nallur.

**Ranji Rajasekaram**

150/10, Station Road,
Jaffna.

(1177)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகுரு அன்னம்மா

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டிக்குளியில் வசித்தவருமான, திருமதி சிவகுரு அன்னம்மா 07-07-1989 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற ஊரெழு பிரபல வர்த்தகர் சிவகுருவின் அன்பு மனைவியும், சிவப்பிரகாசம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) (U.K.), அருள்பிரகாசம் (இளைப்பாறிய கூட்டுறவு மொத்த விற்பனவு ஊழியர்), காலஞ்சென்ற விநாயகபிரகாசம், Dr. செல்வ விநாயக பிரகாசம் (சங்கராஜபுர அரசாங்க வைத்தியசாலை, கண்டி) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சந்திரவதனா, ஈஸ்வரி, பரமேஸ்வரி, தேவகி ஆகியோரின் ஆசை மாமியாரும், சிவநாதன்(U.K.) வனஜா (U.K.), சிவச்சந்திரன் (U.K.), கிரிஜா (Canada), ரவிச்சந்திரன், சுமதி (சட்டத்தரணி, கொழும்பு), கலாவதி, வசந்தி, ரஞ்சித் (ஓமான்), ருஜினி, றஜனி, றஜீந்தி, தேவப்பிரகாஸ், வரப்பிரகாஸ் (பரி. யோவான் கல்லூரி), தாரணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமை பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-07-1989 திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் :
**Dr. செல்வ விநாயக பிரகாசம்**

75/2, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[1173]

### திரு. கந்தையா இரத்தினசிங்கம்

யாழ்ப்பாணம், இல. 3, வைமன் வீதியில் வசித்தவரும், முன்னாள் மன்னார் நெசவு யூனியன் பொது முகாமையாளருமாகிய பப்பா என்றழைக்கப்படும் திரு. கந்தையா இரத்தினசிங்கம் அவர்கள் காலமாகி விட்டார். இவர் முன்னாள் மன்னார் நெசவு ஆசிரியர் திருமதி பரிபூரணம் அவர்களின் அன்புக் கணவரும், தேசிங்குராஜன் (கிறிஸ்டன் M. N. S. & Co., யாழ்), ஜெயசிங்கராஜன் (சிங் - யாழ். பல்கலைக்கழகம்), சித்ரலேகா (தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

ஈமக்கிரியைகள் நாளை 10-7-89 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**மனைவி, மக்கள்**

இல. 3, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(11491)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சு. சிவகாமசுந்தரி

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி சிவகாமசுந்தரி சுப்பிரமணியம் 8-7-89 கிளிநொச்சியில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா சுப்பிரமணியம் [ஓய்வு பெற்ற வனபரிபாலன மாவட்ட அதிகாரி] அவர்களின் அன்பு மனைவியாரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி அப்புக்குட்டி அவரின் மகளும் காலஞ்சென்ற அப்புக்குட்டி சிவசுந்தரம் [ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா பணிப்பாளரும், முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும்) அவர்களின் அன்பு சகோதரியும் மனோகரி, சிவநாதன் (ஆசிரியர், கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி) கமலாசினி, தயானந்தன் (U.S.A.), சதானந்தன் (C.G.R, கொழும்பு கோட்டை), சரோஜினி (U.K.), விவேகானந்தன் (India), குவானந்தன் (Germany), சர்வானந்தன் (பொறியியலாளர் U.K.) சச்சிதானந்தன் (பொறியியலளர் U.K.), யசோதர, சாரதா, சுகந்தி (U.K.) இவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற E. K. நாகராஜா, செல்வரத்தினம், மகேந்திரன் (பரந்தன் இரசாயன தொழிற்சாலை), கௌரி (U.S.A.), அசோகமலர் சற்குணதேவா (UK) விமலேஸ்வரி (Bahrain), மஞ்சுளா (U.K.), வள்ளிநாயகி (U.K.) விக்கினராஜா (கிளிநொச்சி), மனோரம் (வாழைச்சேனை, காகிதத் தொழிற்சாலை), ஜெயந்தன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சிவசுந்தரம் தோட்டம் பரவிப்பாஞ்சான், கிளிநொச்சியில் நடைபெறும். தகனக்கிரியைகள் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
**சி. விக்கினராஜா**
**மருமகன்**

பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

[11489]

### திருமதி சுப்பையா அன்னபூரணம்

திருமதி சு. அன்னபூரணம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பையாவின் (பத்தர்) அன்பு மனைவியும், பஞ்சரத்தினம் (உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை - கச்சேரி, மன்னார்), தவமணி, பேரின்பராசா, நாகேஸ்வரி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி (லண்டன்), சந்திரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசிங்கம் (சிக் அன்கைன்), மகாதேவா, சிங்கராசா (லண்டன்), நிர்மலராணி ஆகியோரின் அன்பு மாமியும், பவந்திகா, சிந்துகா, அருட்செல்வன், அனிதா, வித்தியா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09-07-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும்.

தகவல் :
**பிள்ளைகள் - மருமக்கள்**

366, கச்சேரி — நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[11483]

### திரு. முத்து சின்னத்தம்பி

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் பிரவுண் வீதியைச் சேர்ந்த முத்து சின்னத்தம்பி 6-7-89இல் காலமானார். அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரனும், பவளத்துரை (உதவி தபாலதிபர்), சேனைத்துரை (கட்டிட படவரைஞர், இலங்கை விமானப்படை, கட்டுநாயக்கா), சங்கத்துரை (T. O., கட்டிடத் திணைக்களம், கல்முனை), செல்வராணி புஷ்பராணி, B.A. ஆசிரியை, (கதிரேசன் கனிஷ்ட பாடசாலை, நாவலப்பிட்டிய), யோகராணி, கலாராணி, சீலா (ஆசிரியை, ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ஏழாலை), சேகர்துரை ஆகியோரின் அன்புத்தந்தையும், பேரின்பராஜா, பெரியநாயகி, நவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவளராஜ், விஷ்ணுபிரியா, கிருஷ்ணபிரியா, சிவகிரி, கிருஷாந்தி, மலரகிதன், பரணீதரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 9-7-89 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**மனைவி, பிள்ளைகள்**

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(11490)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 332/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 07 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.